**CC.No.261/2014 (JM.No.II, DHARMAPURI)**

**11.11.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW-7 : திரு.மாரியப்பன், த/பெ. அர்ஜீணன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பழைய இண்டுரில் குடியிருந்து கொண்டு கல் உடைக்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 10.00 மணியளவில் பழைய இண்டுரில் அ.சா.1ற்கும் எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் அதன் பிறகு அ.சா.1 யையும் எதிரிகளையும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன். அதன்பிறகு போலிஸார் வந்து விசாரித்ததாக சொன்னார்கள். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த கையெழுத்தை அரசு மருத்துவமனையில் வைத்து போட்டேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 16.05.2014 ம் தேதி காலை 11.35 மணிக்கு இண்டுர் போலிஸார் சண்டை நடந்த இடத்தில் வந்து விசாரித்து, வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சி யாக இருக்க கேட்டதால் நானும், சஞ்சீவன் என்வரும் சாட்சி கையெழுத்து பேட்டோம் என்று போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சத்தம் கேட்டு சம்பவயிடத்தை நான் சென்று பார்த்த போது அங்கு இருட்டாக இருந்தது என்றாலும், அப்போது அ.சா.1 அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தது மட்டும் எனக்கு தெரியும் என்றாலும், வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

**CC.No.261/2014 (JM.No.II, DHARMAPURI)**

**11.11.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW-8 : திரு.சஞ்சீவன், த/பெ. வேடியப்பன்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பழைய இண்டுரில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 09.00 மணிக்கு மேல் குருமூர்த்தி என்பவர் தங்கவேல், முத்துராஜ், சின்னதம்பி, தங்கவேலின் மனைவி ஆகியோர்கள் அடிப்பட்டுவிட்டதாக சொன்னார்கள். நான் அவர்களை காரில் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சைக்காக சேர்த்தேன். மறுநாள் காலை 09.00 மணிக்கு மேல் இண்டூர் போலிஸார் சாட்சி கையொப்பம் போட கேட்டனர். நான் சாட்சி கையொப்பம் போட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம்** என்னுடையது. அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 16.05.2014 ம் தேதி காலை 11.35 மணிக்கு இண்டுர் போலிஸார் சண்டை நடந்த இடத்தில் வந்து விசாரித்து, வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக இருக்க கேட்டதால் நானும், மாரியப்பன் என்வரும் சாட்சி கையெழுத்து பேட்டோம் என்று போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கையெழுத்திட்ட நேரம் காலை 09.00 – 10.00 மணி இருக்கும். நான் கையெழுத்திட்டதாக கூறப்படும் இடத்திற்கு போலிஸார் முன்கூட்டியே வந்திருந்தனர் என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி நேரத்தில் நான் ஒரு கையெழுத்து தான் இட்டேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.